பட்ட நடவடிக்கைகளை தடுப்பதற்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் கிட்டத்தட்ட 50 ஆயிரம் ரூபாய் அளவில் அபராதமாக வசூலிக்கப்பட்டிருக்கிறது. எனவே இதை தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ெ. செக்கலிங்கம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், ஆட்டோ ரிக்ஷாக்களை நாம் கூப்பிடுகிறபோது, அவர்கள் ஒரு கிலோமீட்டர், 2 கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருந்தால் வர மறுக்கிறார்கள். 3 ரூ. 5 ரூ. கொடு என்று கேட்கிறார்கள் என்று சொன்னால், அந்த உடனடியாக அமைச்சருக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அதை எப்படி தெரிவிக்க முடியும்? அத்தோடு, அப்படி ஏதாவது செய்தால், அவர்கள் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து விடுகிறார்கள். அது மட்டுமல்ல இரவு நேரங்களில் 10 மணிக்கு மேல் பயணம் செய்ய நேரிட்டால் மேலும் 1 ரூபாய் கொடுப்பது என்பது பற்றிக் கூறினார்கள். ஆனால் 8 மணிக்கே அவர்களை அழைத்தாலும் அதிகமாகக் கேட்கக்கூடிய நிலைமை இருக்கிறதே, அதை அமைச்சர் அவர்கள் அறிவாரா? அதற்கு ஏதாவது ஆவன செய்ய முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இப்படிப்பட்ட குறைகள் ஏற்படுகிறபோது நேரிடையாக எனக்குத்தான் சொல்ல வேண்டும் என்ற சூழ்நிலை இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. அங்கே இருக்கும் போக்குவரத்து துறை அதிகாரிகளுக்கோ அல்லது காவல் துறை அதிகாரிகளுக்கோச் சொல்லலாம். ஆட்டோ ரிக்ஷாக்காரர்கள் ஒன்றாக சேர்ந்து விடுகிறார்கள் என்று சொன்னார் அதற்கு நமக்கு பங்கு இருக்கிறது. இங்கே இருக்கிற அத்தனை அரசியல் கட்சிகளுக்கும் அங்கே யூனியன்கள் உண்டு. அந்தந்த கட்சிக்காரர்கள் தங்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களை கட்டுப்படுத்தி வைக்கக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்குமேயானால், அரசாங்கத்தின் பணி எளிதாக இருக்கும்.

வேதாரண்யத்தில் நகரப் பேருந்து விடும் திட்டம்.

*வினா எண் 256—திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் நகரில் நகரப் பேருந்து விடும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) அது எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ) வேதாரண்யத்தில் நகரப் பேருந்து 21–10–81 முதல் விடப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகளை அந்தப் பகுதியிலே விட்டதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே விடப்பட்டிருக்கிறபேருந்துகள் 10 கிலோ மீட்டருக்குள்ளாக தான் சென்று வருகின்றன. ஆகவே அரசு அனுமதித்திருக்கிற 30 கிலோமீட்டருக்கு அவைகளை விடுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, தேவையானால், அரசு ஏற்பாடு செய்யும்.

மினி பஸ்களுக்கு வரிச்சலுகை அளிக்கும் திட்டம்.

*வினா எண் 257—திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மினி பஸ்களுக்கு (Mini Buses) வரிச்சலுகை அளிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்தச் சலுகை எப்போது முதல் நடைமுறைப்படுததப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) மற்றும் (ஆ): சிறு உந்துகளுக்கு ஏற்கனவே வரிச்சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மினி பஸ்களை இயக்குவதற்கு, உரிமம் கேட்டு தனியார்களிடம் இருந்து ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா? அப்படி வந்தால் அவர்களுக்கு உரிமம் வழங்கப்பட அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 69 மினி பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அதிலே அரசாங்கத்திற்குச் சொந்தமானவை 49, மீதி 20 வண்டிகள் தனியார்களுக்குச் சொந்தமானவைதாம். தேவையான நேரத்தில் பேருந்துகள் விடவேண்டும் இந்த இடத்தில் என்று சொல்லி அரசு முயற்சி எடுக்கிறபோதுதான் தனியார்கள் அதற்கான மனுக்களைக் கொடுக்க முடியும். அவர்களாகவே கொடுக்க முடியாது.

திரு. செ. செம்மலை: பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான கிராமப்பகுதிகளை இணைப்பதுதான் இந்த மினி பஸ்களை விடுகின்ற நோக்கம். ஆனால் பேருந்துகளுக்கு உரிய கட்டணம் தான் இந்த மினி பஸ்களுக்கும் வசூலிக்கபபடுகிறது. ஆகவே, அந்தக் கட்டண அளவை நகர்ப்பேருந்துகளுக்கு வசூலிக்கப்படுவதுபோன்று குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?